**சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழில்நுட்ப நிதியம் - 2013**

சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழில்நுட்ப நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையின் வருமானச் செலவுக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன், நிதியத்தின் இரண்டு செயற்பாடுகளான சுங்க மேலதிக நேரத்திற்கான வருமானக் கூற்று அட்டுறு அடிப்படையிலும், கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க

தகலவ்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப பகுதிக்குரிய வருமானக் கூற்று காசு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழிநுட்ப நிதியத்திற்காக திரட்டிய வருமானச் செலவினக் கூற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

இலங்கை சுங்கத்தால் 91 கப்பல் முகவர் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகளுக்குரித்தாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 8,485,000 ஆன வைப்புக்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் விசேட வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்தக் கடன்பட்டோரிடமிருந்து 60 சதவீதத்தைப் பிரதிநிதிப்படுத்திய ரூபா 20,877,676 ஆன கடன் மீதிக்காக 5 சதவீதம் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக இக்கடன் மீதி அறவிடப்படாமல் காணப்படுவதால் அந்த நிச்சயமற்ற நிலைமையை கருத்திற் கொண்டு போதியளவில் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ஆ) முதலீட்டு சபையின் கொள்கலன் பரீட்சிப்புத் தளம் பிரிவு (BOI-CVT) ஒருகொடுவத்த என்ற பெயரில் 2004 ஆம் ஆண்டிற்குரிய கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 534,773 தொகையான மீதி, அந்நிறுவகத்திற்குரிய நீர்ப்பட்டியலுக்காக 2008 ஆம் ஆண்டின் போது எதிரீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் போதும் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டிற்குரிய நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 708,656 தொகை திரட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட வேண்டிய நீர் மற்றும் மின்சார செலவினத்திற்காக 2008 ஆண்டின் போது எதிரீடு செய்யப்பட்டிருந்ததை சீராக்குவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 7,017,198 தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா 1,730,375 தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் என்பவற்றிற்காக உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2007 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1520/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 91 கப்பல் முகவர் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகளுக்குரித்தாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வைப்புக்கள் பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்தாமல் அரசாங்கத்திற்கும் வைப்பு உரித்துடையவருக்கும் செலுத்த வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2013 செய்தம்பர் 27 ஆம் திகதிய 1829/39 ஆம் இலக்க நிதி அமைச்சரின் அதிவிசேட வர்த்தமானி | நிதியத்தின் பெயர் ''சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழில்நுட்ப நிதியம்'' என மாற்றப்பட்டிருந்த போதும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ''சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மேலதிநேர நிதியத்திறகுரிய நிதி விளைவுகள் மாத்திரம் வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 20,318,093 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 145,587,707 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 165,905,800 ஆன வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மேலதிக நேர செலவினம் 47 சதவீதத்தினால் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 09 ஆண்டுகளுக்குரிய மேலதிக நேர நிதியத்தின் நிதி விளைவுகள் தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | மிகை/ (பற்றாக்குறை ) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் முன்னேற்றம்/ (வீழ்ச்சி) சதவீதமாக | மிகை/ (பற்றாக்குறை) வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| 2004 | 336.786 | 302.717 | 34.069 | (40.15) | 10.12 |
| 2005 | 381.696 | 367.750 | 13.946 | (59.06) | 3.65 |
| 2006 | 490.012 | 384.789 | 105.223 | 654.52 | 21.47 |
| 2007 | 576.415 | 425.920 | 150.495 | 43.02 | 26.11 |
| 2008 | 576.671 | 424.275 | 152.396 | 1.26 | 26.43 |
| 2009 | 465.837 | 410.236 | 55.602 | (64) | 12.00 |
| 2010 | 583.491 | 416.289 | 167.202 | 200 | 28.64 |
| 2011 | 593.065 | 421.883 | 171.182 | 2.38 | 28.86 |
| 2012 | 577.392 | 431.805 | 145.587 | (14.95) | 25.21 |
| 2013 | 588.163 | 608.481 | (20.318) | (113.95) | (3.46) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்திலிருந்து பதவியணியினருக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 549,708,309 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அது 373,430,297 ஆக இருந்தது. 2013 மார்ச் 01 ஆம் திகதிய 855 ஆம் இலக்க இலங்கை சுங்கத்தின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அனைத்து உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட மேலதிக நேரத் தொகை 45 சதவீதத்தால் அதிகரித்துக் கொடுத்தமை முன்னைய ஆண்டினை விட மேலதிக நேரச் செலவினம் அதிகரித்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை சுங்கத்தின் மொத்த பதவியணியினர் 2078 ஆக இருந்ததுடன், நிதியத்தின் ஒரு ஊழியருக்கான சாராசரி மேலதிக நேர கிரயம் ரூபா 264,537 ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் போது நிதியத்தின் ஒரு ஊழியருக்கான சாராசரி மேலதிக நேர கிரயம் ரூபா 174,093 ஆக இருந்தது. நிதியத்தின் ஒரு ஊழியருக்கான சாராசரி மேலதிக நேர கிரயத்தை கணிப்பிடும் போது இலங்கை சுங்கத்தின் செலவினத் தலைப்பின் கீழ் திரட்டிய நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மேலதிகச் செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்காக திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்ட கிரயம் ரூபா 3,482,065 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பயன்படுத்தப்படாத பணத்தொகை திறைசேரி வைப்பாக ஒவ்வொரு ஆண்டின் போதும் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் இவ் வைப்புக்கணக்கின் மீதி மற்றும் நிதியத்தின் மீதிகள் என்பன கீழே காண்பிக்கப்பட்டவாறு விருத்தியடைவதைக் காட்டுகின்றது. இம்மீதி தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி பொருத்தமான முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

| ஆண்டு | மேலதிக நேர நிதியம் | கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டண நிதியம் | திறைசேரி வைப்புக் கணக்கு மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2005 | 28,007,949 | -- | 28,007,949 |
| 2006 | 254,940,825 | 93,672,857 | 348,613,682 |
| 2007 | 451,423,786 | 157,259,952 | 608,683,738 |
| 2008 | 616,810,938 | 246,576,326 | 863,387,264 |
| 2009 | 669,350,013 | 322,004,787 | 991,354,800 |
| 2010 | 849,082,264 | 369,645,856 | 1,218,728,120 |
| 2011 | 1,022,822,795 | 252,069,822 | 1,274,892,617 |
| 2012 | 1,176,009,046 | 290,987,052 | 1,466,999,098 |
| 2013 | 1,172,194,952 | 326,530,883 | 1,498,725,835 |

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,670,140 நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 13 நிறுவனங்களுக்குரிய ரூபா 2,350,089 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் பலவருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன், அந்த நிறுவனங்களுக்குரிய விஷேட வைப்பாக ரூபா 3,100,273 தொகையான பொறுப்புக்களும் ஐந்தொகையில் காணப்பட்டது. அந்த மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி பிரிவின் கொள்கலன் பரிசோதனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் மூன்று உத்தியோகத்தர்களால் ஒரு நாளின் போதான பரிசோதனை சந்தர்ப்பங்கள் 35 – 45 இற்கு இடைப்பட்டிருந்த எண்ணிக்கையில் அலுவலக நேரத்திற்குப் பின்னர் மேற்கொள்ளல் மற்றும் அது ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டிருந்தமை மிகவும் குறுகிய காலத்தில் பல்வேறு திசைகளில் அமைந்துள்ள நிறுவனங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டிருந்தமை நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்றாக இருந்தமையால் அந்த உத்தியோகத்தர்களுக்காக கப்பல் சரக்குப் பரிசோதனைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 129,200 தொகையான கொடுப்பனவு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ருக்ஸ் கொள்கலன் செயற்திட்ட பிரிவிற்கு (RCT) உரித்தான தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2013 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் செப்தம்பர் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் சேவைக்கு அறிக்கையிடாதிருந்ததுடன், வருகை பதிவை மேற்கொண்ட சில உத்தியோகத்தர்கள் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு பங்குபற்றியமைக்கான எழுத்துமூல சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1967 முதல் 1973 வரையான காலப்குதியில் 75 நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 263,500 தொகையான ஆரம்ப வைப்புப் பணம், சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த வட்டி ரூபா 10,866,028 ஆக இருந்தது. வருடக் கணக்காக இப்பணம் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்த காரணத்தால்

மிகவும் குறைந்த வட்டி வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பணத்தை வேறு பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திணைக்களத்தின் மேலதிக நேர மீளாய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு 45 சதவீதத்தால் அதிகரித்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாத காலப்பகுதியில் ஏற்றுமதிப் பிரிவில் 06 உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒவ்வொரு மாதத்திற்காகவும் சகல உத்தியோகத்தர்களுக்கும் 395 மணித்தியாலங்கள் முதல் 663 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் மேலதிக நேரச் சம்பளமாக ரூபா 25,841 முதல் ரூபா 44,311 வரையான வீச்சில் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்களுக்கிடையே இடையே 05 உத்தியோகத்தர்களும் மாதத்தின் சகல நாட்களிலும் 20 மணித்தியாலத்தை விஞ்சி மேலதிக நேர வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

(இ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ரூபா 26,574 முதல் ரூபா 36,292 வரையான வீச்சில் மாதாந்த மேலதிகப் படிக்கும் மேலதிகமாக அம்மாதத்திற்காகவும் ரூபா 129,860 முதல் ரூபா 165,100 வரையான வீச்சில் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணத் தொகை செலுத்தப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டின் செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 53 சதவீத அளவிலான அதிகரிப்பொன்று கண்டறியப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலுவை வருமானம்
(ஆ) மேலதிக நேர சேவை
(இ) கணக்கீடு
(ஈ) கொள்கலன் பரீட்சிப்பு நடவடிக்கைகள்